செய்தி **குறிப்பு 04** நாள் 11.01.2010

## வேளாண்மை அமைச்சர் அலுவலகம்

### தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்குதல்.

**2008 நவம்பர் மாதத்தில் நிஷா புயலினால் பாதிக்கப்பட்ட நெல் பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகையாக காப்பீட்டு கழகத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூ.651.66 கோடியில் மாநில அரசின் 50 சத பங்கான ரூ.306.477 கோடி மற்றும் இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு கழக பிரிமீயத் தொகையில் 50 சதமான ரூ.19.353 கோடியும் சேர்த்து ரூ.325.83 கோடி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதல் தவணையாக வழங்கப்பட்டது.**

**மத்திய அரசு தனது 50 சத பங்கான ரூ. 306.477 கோடியில் முதல் தவணையாக விடுவித்த ரூ.45.813 கோடியுடன் இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு கழக பிரிமீயத் தொகையில் மீதமுள்ள 50 சதமான ரூ.19.353 கோடியும் சேர்த்து ரூ.65.166 கோடியை இரண்டாம் கட்டமாகவும், மத்திய அரசு அளிக்க வேண்டிய மீதத் தொகையான ரூ.260.66 கோடியில் சென்ற வாரம் விடுவித்த ரூ.131.595 கோடியில் ராமநாதபுரத்திற்கு ரூ.2.51 கோடியும், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு ரூ.129.085 கோடியும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி மத்திய அரசு இன்று (11.1.2010) விடுவித்துள்ள ரூ.77.451 கோடியை தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு பொங்கலுக்கு முன் வழங்கப்படும். எஞ்சிய தொகை 10 சதமான ரூ.51.618 கோடியை உடன் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதால் தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் விவசாயிகள் வதந்திகளை நம்ப வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9